37

உ

சரஸ்வதி சகாயம்.

ஸ்ரீ வில்லிபுத்தூர்த் தாலுகா குன்னூரையடுத்த

புதூரென்ற கீழக்கோபாலபுரம்

மாரியம்மன்

# மகத்துவக் கும்மி.



இந்நூல்

ஷை கீழக்கோபாலபுரத்தில் வசிக்கும்

மகா-ா-ா-ஸ்ரீ வே. செந்தூர்க்காளை நாடார்

அவர்கள் வேண்டுகோட்படி

ஸ்ரீவில்லிபுத்தூர்,

ஸ்ரீமான் அருணகிரி நாடார் அவர்கள் பௌத்திரரும்,

ஸ்ரீமான் சற்குண நாடார் அவர்கள் புத்திரருமாகிய

ஆசுகவி வித்வான்,

...ப்பாத்துரை நாடார் அவர்கள்

...பற்றியது.

...மிட்டேட் அச்சாபீசில் பதிப்பிக்கப்

...பற்றது. [அணா-2.

ஓ25:36·21
N27
128209

சரஸ்வதி சகாயம்.

ஸ்ரீவில்லிபுத்தூர்த் தாலுகா குன்னூரையடுத்த

புதூரென்ற, கிழக்கோபாலபுரம்

# மாரியம்மன் மகத்துவக் கும்மி.

இந்நூல்

ஷை கிழக்கோபாலபுரத்தில் வசிக்கும்

மகா-ள-ள-ஸ்ரீ வே. செந்தூர்க்காளை நாடார்,

அவர்கள் வேண்டுகோட்படி

ஸ்ரீவில்லிபுத்தூர்,

ஸ்ரீமான் அருணகிரி நாடார்

அவர்கள் பௌத்திரரும்,

ஸ்ரீமான் சற்குண நாடார்

அவர்கள் புத்திரருமாகிய

ஆசுகவி வித்வான்,

மகா-ள-ள-ஸ்ரீ அப்பாத்துரை நாடார்

அவர்கள் இயற்றியது.

——()——

சிவகாசி, நாடார் பிரஸ் லிமிட்டெட் அச்சாபீசில் பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1927. [அணா-2.

——()——

# புதூர் மாரியம்மன்

## மகத்துவக் கும்மி.

சாற்றுக்கவிகள்.

சாத்தூர் தாலுகா, கிருஷ்ணப்புரி வாசியும்
இந்நூலாசிரியரின் ஆப்த நண்பரும் மகா வித்துவானுமாகிய
ஸ்ரீமான் மா. க. அனந்தப்ப நாடார்
அவர்களியற்றியது.

---

### எண் சீரடியாசிரிய விருத்தம்.

பூவளஞ்சேர் புதூர்தனிற் புலவோர் வாழ்த்தப்
புரவலஞ் சத்திரியர் போற்றி செய்து
நாவளஞ்சேர் துதிபாடும் ஞானமாரி
நாரணிமேற்கும் மியிசை நன்கிசைத்தான்

காவளஞ்சேர் புதுவைநகர்க் கதிபன்சோதிக்
கனகமணி மாளிகையான் கருணை வள்ளல்
மாவளஞ்சேர் சற்குணவேள் தவத்தில்வந்த
மகவெனுமப் பாத்துரையாமதி வல்லோனே.

### நேரிசை வெண்பா.

பார்த்து முனியும்பயங்கொண்டான் பாவலரு
மார்த்து வியந்தாரயிலனுமும்—மூர்த்திகளும்
முப்பாத்துரையாளு முந்நீர்பூநாகமுற்றார்
அப்பாத்துரைப்பாவணி.

சாத்தூர்த்தாலுகா, சொக்கம்பட்டிவாசியும் இந்நூலாசிரியரின்
ஆப்த நண்பருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ மகா வித்வான்
ஆ. இராமசாமிநாடார் அவர்களியற்றியது.

—()—

### நேரிசை வெண்பா.

வண்டாரும் பூஞ்சோலை வாய்ந்த புதூர் மாரிமிசை
கண்டாருங்கும்மி கழறினான்—கொண்டாடும்
சற்குணவேள்செய்த தவத்தாலவதரித்த
நற்குண வப்பாத்துரை யிந்நாள்.

கலைமகள் கருணை.

## மாரியம்மன்
## மகத்துவக் கும்மி.

### காப்பு.

### கலி விருத்தம்.

178249

பூமலிந்த புதூரிற் பொருந்திடும்
மாமலிந்த மதிமுக மாரிமேல்
நாமலிந்தநடனக்கும்மி சொலப்
பாமலிந்த பராபரன் காப்பதாம்.

### நூல் வரலாறு

எண்சீரடியாசிரிய விருத்தம்.

மாதங்கமணிமலியு மகிமைசாரு
மாசதுரகிரியருகில்வானோர் மெச்சப்
பூதங்கப் பலவளமும் பொருந்தியுள்ள
புதூர்நகரிற் சத்திரியர் போற்றிசெய்யு
மாதங்கநிறமேனி வயங்குமாரி
மாதங்கிமாவேப்ப மாலைகண்டும்
பூதங்கள்பணிவிடைசெய் பொன்னி சீரைப்
புரந்தரனுமசம் பையர்க்குப் புகல்கின்றானே.

### நூல்.

நாமகள் நமஸ்காரம்.

மங்களந்தங்கும் புதூரில் வளர்ந்திடு (1)
மாரியம்மன் கும்மிப்பாட்டுரைக்க
சங்கத்தமிழ தென்னாவில னுதினந்
தங்கச்சரசுவதி காப்பாம்.

ஆசிரியர் வணக்கம்.

செந்தமிழ்க்கும்மி யிதைத்தீட்டவுயர் (2)
தெய்வ சிகாமணித் தேசிகரின்
சந்தமிகுமலர்த்தா ளிணையைச்சிரந்
தாங்கியனுதினந்தான் பணிவாம்.

அவையடக்கம்.

ஆரங்கமழ் பொதிகாசல மாமுனி (3)
யன்னவலர் முனின்னூல் பாடல்
சாரங்கமோடிடக் கண்டசிறுமுயல்
தானதுபோனினைந்தோட லொக்கும்.

நூலியற்றியவர் பெயர்.

மாவளமேவிய வில்லிமகாநகர் (4)
மதிகுலச்சற்குணவேள் குமரன்
பாவளவைக்கண்டு பாடுமப்பாத்துரைப்
பாவலனிக்கும்மி பாடினனே.

நூலியற்றிய காலம்.

முத்தார் கழைவயல் சூழும்புதூர் வளர் (5)
முக்கண்ணி மேற்கும்மிப் பாடலிது
சித்தார்த்திரி வருடத்தினிற் சித்திரைத்
திங்கண்முதல் தினஞ்செப்பியதே.

நூலியற்றிய இடம்.

மஞ்சார்குன்னூரி னிற்பண்ணைமுதலியின் (6)
மாகலாசலையில் வீற்றிருந்து
மஞ்சிதகல்வினைப் போதிக்கும்போதிவிம்
மாசகல்கும்மி வகுத்தேனே.

நூலின் சிறப்பு.

முக்கனிவெட்கிட மிக்கருசியுறு (7)
மூக்கிய நூலிதைக் கற்பவர்கள்
தக்கநல்வாழ்வுடன் பூரணவாயுளுஞ்
சார்ந்துபின் மோட்சமடைவாரே.

நாட்டுச் சிறப்பு.

நாவலர்மெச்ச வளங்குலவும் புதூர் (8)
நாட்டுச்சிறப்பினிஞன் சிறிது
காவலரும்மிகவானந்தமெய்திடக்
காட்டிவருகிறேன் பாருங்கடி.

விண்ணையளாவிய வாலமரத்தினுள் (9)
வீரப்ப பிள்ளை யினூருணிடார்
தண்ணிழலில் வழிப்போக்கர்தவிப்பறத்
தங்கிரோடி நற் சாதமுண்பார்

சின்னமலையிது சிற்றூரு மிது (10)
தேன்வடியும் நரிப்பாறையது
முன்னர்தெரிவது தண்ணீர்நிறைவுறு
முத்துப்பிள்ளை யவரூருணியே.

சம்பிரமத்துடன்மேல் திசைமொச்சடி (11)
சாருங் கருப்பண சாமியுடன்
கும்பிட்டருச்சனைசெய் முனியாண்டியின்
கோவிலழகையும் பாருங்கடி.

அலுப்பையகற்றிட வானந்தமாகிட (12)
யாவருமெச்ச வருகிலுள்ள
இலுப்பைத்தோப்புக்குளிங்கிதமாகவே
யெய்திவிட்டோமடி யிப்போது.

மயில்கள்வளமுடனாடுவதும் பல (13)
வண்டுகவிகளைப் பாடுவதும்
குயில்கள்வரிசையாய்க் கூவுவதுமிகக்
கூடிக்கிளிகளுந் தாவுவதும்.

பொற்புடன்பற்பல புஷ்பங்களுமிகப் (14)
பூத்துக்கமழ்ந்திடு நேர்த்தியையும்
விற்பனமாகவே கண்டுமகிழுவீர்
விண்ணுலகத்திருப் பெண்ணரசே.

பாவைநேரிக்கு மொழியாளேயிலுப் (15)
பைத்தோப்பதின் வளம்பார்த்துவிட்டுக்
கோவைநேரிக்குளங்கண்டோமே சொல்லக்
கூடாதவானந்தங் கொண்டோமே.

ஆடாதசெக்கரை யாதவம்மிகுலே (16)
யாதகுக்கல் புடையாதமுறம்
சேடாகக் குத்தாவுலக்கைகள் கூவிடாச்
சேவலுமுண்டிக் குளத்திலுள்ளே.

மயிலுகந்தாள்குகன்மால் பிரமன்சிவன் (17)
வானவர்யாவரும் வந்தனைசெய்
வெயிலுகந்தாள்வளர்விச் சித்ரக்கோவிலின்
விந்தையைப்பாரடி மின்னரசே.

மன்னவர்மெச்ச வடதிசையிலதோ (18)
பாமலையொன்று தெரிகிறதே
நன்னயத்தோடதின் பேரைநவிலுவீர்
நாங்களுங்கேட்டு மகிழ்வாக.

தரிசனைசெய்தவர் பாவம்பறந்திடுஞ் (19)
சதுரகிரியதுதான் மயிலே
கரிசனையாகவே யாடியமாவாசை
காலத்திலுற்சவங் கூடுமடி.

முந்நீர்கிகரெனமுத்தமி ழோர்சொல (20)
மோதியலை கொழிக்கும்பெரிய
வெந்நீர்கொண்டான் குளம்பார்ப்பீரே புவி
மெச்சுங்குன் னூரிந்த வூர்ப்பேரே.

செந்நெல்விளைவுறு சீதவயலினுட் (21)
சேருமிருளப்பசாமி யவர்
சந்நிதிதன்னையுமையனு ராயவர்
தங்கியகோவிலும் பாருங்கடி.

வஞ்சியரேமுனியாண்டி நதியிது (22)
வற்றாதுநித்தம் புனலோடும்
கொஞ்சியமாருந்தங்கி மகிழ்வுறுங்
கோதிலாவாலமரம் பாரும்.

நகரச்சிறப்பு.

சந்திரனூடொளிர் தங்கவசண்மனை (23)
தங்கும்புதூர் வளத்திற்சிறிது
இந்திரலோகவெழின் மடமாதர்கா
ளெந்தனுலானமட்டும் பகர்வேன்.

கண்ணியமேவிய சத்திரியோர்பணி (24)
காளியம்மன்வளர் கோவிலையும்
புண்ணியமேவிய சின்னம்மாள்கோவிலும்
பூரணமாகவே பாருங்கடி

தங்கக்குடந்தனைத் தோளேந்தித்தலை (25)
தாழ்த்தியேசத்திரியர் மரபின்
நங்கையரேயென்றும் நண்ணியெடுத்திடும்
நல்லதண்ணீரின் கிணறிதுபார்.

சதுரகிரியெனச் செந்நெலனுதினந் (26)
தான்குவிகின்ற களம்பாரும்
மதுரக்கரும்பு கடலையவலெலாம்
மாந்தும்விநாயகர் கோவிலிது.

அன்பாகவேயினும் வாருங்கடியிது (27)
ஆறுமுகநயினார் கோவில்
முன்பாகயாவரும் பாருங்கடியது
முருகசாமிவளர் கோவில்

அத்தன்கிறிஸ்துசபை யிலொரு பிரி (28)
வாகிய ரோமான் சபையார்கள்

சித்திரக்கோவிலே வித்தியாசாலையைச்
சிந்தைமகிழ்வுடன் பாருங்கடி.

வெற்றிசேர் சத்திரியர் வீதியிது (29)
வேதப்பிராமணர் வீதியிது
நற்றிரு வைசியர் வீதியதிது
நங்கையே சூத்திரர் வீதியிது.

பெரியகடையிது பெண்ணரசேயிதிற் (30)
பேரார்சரக்கின் வகைகளினைத்
தெரியவுரைத்திடத் தேசமெலாம்புகழ்
செந்தமிழ்வாணர்க் கரிதாமே.

## கோவில் சிறப்பு.

கொண்டாடிப்போற்றிடு மாரியம்மன்வளர் (31)
கோவிலை நந்தவனச்சிறப்பைக்
கண்டவர்மெச்சுங் கிணற்றினழகையுங்
கண்டுமகிழுவீர் கன்னியரே.

இந்திரலோகத்தைநயெட்டியே தொட்டிடு (32)
மேற்றமிகுந்திரு மாமதிலும்
சந்திரகாந்தமரகதங் கொண்டுமே
சாலவமைத்தமுன் மண்டபமும்.

மாணிக்கத்தாலேபொருத்திய தூண்களும் (33)
வச்சிரத்தாற்செய்த வுத்திரமும்
ஆணிக்கனகமதாலே யமைந்திடு
மாச்சரியமிகும் போதிகையும்.

இத்தரைமெச்சிடவே திருமுத்தினு (34)
லிங்கிதமாகச்செய் சன்னல்நிலே
பத்தரைமாற்றுயர் பொன்னாலேவெகு
பாங்காயமைத்த கதவுகளும்.

சிற்பர்திறமையாற் செம்பவளங்கொடு (35)
செய்த தளவரிசைகளோடும்
நற்பரிவாகவே ரத்தினத்திற்செய்து
நண்ணுங்கொடிமரமும் பாரும்.

## அம்மன் சிறப்பு.

தங்கமலையிற்பிறந்தவளே தெய்வத் (36)
தையலர்தம்மிற் சிறந்தவளே

அங்கமலேவுறவே மகிடாசுரன்
அஞ்சவதைத்திடு மீஸ்வரியே.

எண்ணுன்கரம்செயும் பூரணியேவுயி (37)
ரெல்லாம் பிழைத்திடக்காரணியே
பண்ணுன்கமர்ந்திடு மாரணியேமுனம்
பாருவகீன்றிடும் நாரணியே.

மாமறையோனுக்கு மாமியிவள்மட (38)
வார்வளாகச் சிவகாமியிவள்
பூமரைமீதமர்பாமகளே தினம்
பொங்கவருள்செயு யாமகளே.

நாரணுக்கொரு தங்கையிவள்சிவன் (39)
நல்லிடப் பாகத்தினங்கை யிவள்
ஏரணிகூடற் பதியாண்டாள்நித
மிக்கும்மிபாடத்துதி பூண்டாள்.

திருவிழா, பொங்கல்சிறப்பு.

பாவலர்மெச்ச வருடா வருடத்திற் (40)
பங்குனிமாதம் பிறந்தவுடன்
ஆவலுடன் முதலாவது தித்திடு
மாதித்தவாரமதிலிருந்து

பாவையரிற்பலர் பத்தியுடனிரு (41)
பத்தொருநாளவரை சித்தியுறக்
காவலர்மெச்ச விரதமிருந்துயர்
கரகமெடுத்த வராடிடுவார்.

அப்புறமோரெட்டுநாளுக்கு முன்னம (42)
தம்மனுக்குப் பொங்கலென்றுசொலி
துப்புரவாகிய வீதிகளிலெலாந்
தூக்குவர் வேப்பங்கொடியதனை.

கொடியதுகட்டியவன் றிரவிலம்மன் (43)
கோவிலைவிட்டு வெளியேறித்
துடியதுபோலுமிடையுடையாய் தெருச்
சுற்றுவள் சிங்கமாவாகனத்தில்.

இங்கிதமாகவிரண்டாம் நாளினி (44)
வேற்றமுடன் பலர்போற்றிவரச்
சங்கிதம் பாடிடக்காளைமாவாகனந்
தன்னிற்பவனி புறப்படுவள்,

மூன்றுநாள் பூச் சப்ரமீதினுலவுவள் (45)
முத்துமாரியம்மன் சித்திரமாய்
சான்றாக முட்டை முருங்கைக்காயாவையுந்
ஐதயலராக்கிப் படைத்திடுவார்

மிக்கபிடாங்குகள் மேளமுழங்கிட (46)
விண்ணுலகவரை வாணமுற
அக்கினிச்சட்டி கரமேந்திமுன
மாடியே பற்பலர்பாடி வர.

ஆனந்தமாகத் தலையிற் கரகம் வைத் (47)
தம்மன்கொண்டாடி முன்னாடிவரத்
தானந்தவேடிக்கை பார்த்திடவத்தினஞ்
சாட்சாத்சிவபெருமானும் வர.

திங்கட்கிழமையிற்பொங்கல்வைத்துக்கடாய் (48)
திட்டமாயாயிரம் வெட்டுவரே
அங்கத்தினூடுகயிறது குத்தியே
அச்சமறப்பலராடுவரே.

வேஷங்கள் பற்பலபோடுவரும்மிக ( 9)
விந்தையாயாலிவைத் தாடுவரும்
தோஷங்கள்தீரென நாடுவரும்லெகு
தோத்திரஞ்செய் திசைபாடுவரும்.

பஞ்சாட்சரத்தையணிவாருமவள் (50)
பாதாரவிந்தம் பணிவாரும்
மஞ்சாருமக்கள் வரமருள்வாயென
மங்கையர் கூடித்தொழுவாரும்.

அஞ்சாதவீரந் தயிரியந்தாவென (51)
ஆடவர்கூடிப் பணிந்திடவும்
எஞ்சாத செல்வமுங் கல்விமுதற்பல
ஈய்ந்தோமென்றம்மை வரமருள்.

அக்கினிபோலுங் கொதித்திடுமஞ்சளை (52)
அங்கத்திலூற்றிப் பலராட
அக்கினிதேவனுமஞ்சி வரங்கொடுத்
தன்புடனன்று புகழ்வானே.

வாழ்த்து.

சீலமுடன் புதூர்மாரியம்மன் மிகச் (63)
சிங்காரமாகத்தினம் வாழி.
கோலமுடனவள் வாழ்ந்திருக்குமுயர்
கோவிலுமென்றென்றுமே வாழி.

மாமகள்சேர் மதுராபுரி நாடார் (54)
மகாஜனசங்கம் நிதம்வாழி
பாமகள்வாழி தமிழ்வாழி கும்மி
பாடிய அப்பாத்துரை வாழி,

பத்தியுடனிந்தக் கும்மியை நித்தம் (55)
படிக்குமனிதரெல்லாம் வாழி
சித்தியுடனிதங்கேட்டு மகிழ்வுறுஞ்
சித்தமுடையவரும் வாழி.

சாத்திரவேதமெலாம் வாழிதமிழ் (56)
சாற்றுங்கவிஞர் தினம்வாழி.
நேத்திரம்போற் புவியாண்டிடுமாங்கிலர்
நீதிசேர் செங்கோல் நிதம்வாழி.

புதூர்

# மாரியம்மன்

# மகத்துவக் கும்மி.

முற்றிற்று.